



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 325 18.05.2026 MONDAY VAIKASI : 4 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 325 18.05.2026 திங்கள்கிழமை வைகாசி : 4 விலை : ரூ.5/-


## ஒலிம்பிக் போட்டி நடத்துவது இந்தியாவின் ஆசை: நெதர்லாந்து இந்தியர்களிடம்

# “பிரதமர் மோடி உரை!”

தி ஹாக்: மே.18-

ஒலிம்பிக் போட்டி நடத்துவது, உலக உற்பத்தி மையமாக இருப்பது உட்பட இந்தியாவுக்கு மிகப் பெரிய ஆசைகள் உள்ளன என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி 5 நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ளார். முதல் நாடாக ஐக்கிய அரபு அமீரகம் சென்ற பிரதமர் மோடி எல்பிஜி, கச்சா எண்ணெய் விநியோகம், சேமிப்பு தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொண்டார். அங்கிருந்து அவர் நெதர்லாந்து சென்றார். தி ஹாக் நகரில்

அங்குள்ள இந்தியர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அவர்களிடம் பிரதமர் மோடி பேசியதாவது: வளர்ச்சியடைந்த நாடுகள் போல், ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்தியாவும் விரும்புகிறது. அதேபோல் உலகளாவிய உற்பத்தி மையமாகவும் பசுமை எரிசக்தி மையமாகவும் உலக பொருளாதார வளர்ச்சி மையமாகவும் இருக்க இந்தியா விரும்புகிறது.



இந்தியாவின் ஆசைகள், எண்ணங்கள், முயற்சிகளுக்கு எல்லையே இல்லை. எல்லா பொருட்களும் ‘மேக் இன் இந்தியா’ வாக இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கிறோம். இதன் மூலம் இந்தியா உலகளாவிய உற்பத்தி மையமாக மாறும்.

இந்திய இளைஞர்கள் நவீன தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்றனர். அவர்களின் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பாதுகாப்பு, விண்வெளித் துறை ஆகிய அனைத்திலும் சிறப்புடன் செயல்படும் இந்திய இளைஞர்களுக்கு நன்றி. இந்தியா செமி கண்டக்டர் மையமாக மாறி வருகிறது. தற்போது 12 செமி கண்டக்டர் மையங்கள் இந்தியாவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. தற்போது கம்ப்யூட்டர் சிப்ஸ்கள் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. செல்போன் உற்பத்தியில் புரட்சி ஏற்பட்டு, உலக செல்போன் உற்பத்தியில் இந்தியா 2வது பெரிய நாடாக உள்ளது.

மிகப் பெரிய ஏஐ உச்சி மாநாடு இந்தியாவில் கடந்தாண்டு வெற்றிகரமாக நடைபெற்றது. பசுமை எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க எனது ஆட்சியில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. இந்தியாவில் அமைக்கப்படும் சோலார் பூங்காக்கள் உலகின் மிகப் பெரிய சோலார் பூங்காக்களில் ஒன்றாக உள்ளன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் பிரேசிலை பின்னுக்கு தள்ளி இந்தியா 3ம் இடம் பிடித்துள்ளது. அடுத்த 2036ம் ஆண்டு இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்காக நெதர்லாந்துடன் கிரிக்கெட் மற்றும் ஹாக்கி விளையாட்டு போட்டிகளில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்தியா விரும்புகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## த.வெ.க.,வினர் 8 பேருக்கு நிபந்தனை முன்ஜாமீன்: ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மே.18-

தேர்தல் நேரத்தில் திமுகவினரை தாக்கியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் தவெகவைச் சேர்ந்த 8 பேருக்கு நிபந்தனை முன்ஜாமீன் வழங்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த ஏப்.23ம் தேதி நடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது, திருவல்லிக்கேணி சேப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டையில் திமுகவினர் வாக்காளர் சரிபார்ப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த தவெகவை சேர்ந்த ரதி, அவரது கணவர் பாஸ்கர், மகன் சூர்யா, கணவரின் தம்பி காந்தி மற்றும் தனுஷ், வாசுதேவன், கவுதமன், விக்னேஷ் ஆகிய 8 பேர் திமுகவினரை தாக்கி, மேஜை, நாற்காலிகளை சேதப் படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக, திமுகவைச் சேர்ந்த கே.வி.மோகன் என்பவர் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், தவெகவைச் சேர்ந்த 8 பேர் மீதும் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் தங்களுக்கு முன்ஜாமீன் வழங்கக் கோரி ரதி, பாஸ்கர் உள்ளிட்ட 8 பேரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு நீதிபதி பி.தனபால் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜி.மோகன கிருஷ்ணன், "ஏற்கனவே ஐஸ் ஹவுஸ் காவல் நிலையத்தில் திமுகவினர் மீது மனுதாரர் புகார் அளித்ததால், அதற்கு பழிவாங்கும் நோக்கில் திமுகவினர் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் மனுதாரர்களுக்கு எதிராக பொய் புகார் அளித்துள்ளனர்.

அந்த புகாரை ராயப்பேட்டை காவல் ஆய்வாளர் விசாரணை நடத்தி உண்மைத் தன்மையை ஆராயாமல் மனுதாரர்கள் மீது பொய் வழக்கைப் பதிவு செய்துள்ளார். மனுதாரர்கள் மீது இதற்கு முன்பாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்பதால் அனைவருக்கும் முன்ஜாமீன் வழங்க வேண்டும்" என வாதிட்டார்.

அதற்கு ஆட்சேபம் தெரிவித்து போலீஸார் தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்கறிஞர் எஸ்.பாலாஜி வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனுதாரர்கள் ஏற்கனவே திமுகவினர் மீது புகார் அளித்ததால், அவர்களும் இவர்கள் மீது புகார் கொடுத்துள்ளனர். தேர்தல் பணி தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சினை இருந்துள்ளது. எனவே, இந்த வழக்கில் மனுதாரர்கள் 8 பேருக்கும் நிபந்தனை முன் ஜாமீன் வழங்கப்படுகிறது.

8 பேரும் சென்னை சைதாப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ரூ.10 ஆயிரம் மதிப்பில் சொந்த ஜாமீன் மற்றும் அதே மதிப்பில் இரு நபர் ஜாமீனும் வழங்க வேண்டும். 4 வாரங்களுக்கு சனிக்கிழமை தோறும் ராயப்பேட்டை காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். நீதிமன்ற முன் அனுமதி பெறாமல் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது என நீதிபதி நிபந்தனை களை விதித்தார்.

## “அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால் சிபிஐ வழக்கு பாயும்” த.வெ.க.,வுக்கு டிடிவி எச்சரிக்கை

சென்னை, மே.18-

“அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால், சிபு சோரன் வழக்கு போல கட்சித்தாவல் சட்டம் பாயும்.” என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் எச்சரித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அமமுக பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன், “தமிழகத்தில் இந்தி திணிப்பை எதிர்த்து வருகிறோம். இன்று உலகமே ஒன்று என்ற சூழல் உருவாகிவிட்டது. தொழில்நுட்பம் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. எனவே மூன்றாவது மொழியை படிப்பதில் தவறில்லை. இந்த தேர்தலில் மாற்றம் வேண்டும் என்ற பெயரில் வேட்பாளர் கூட யாரென்று தெரியாமல் தவெகவுக்கு வாக்களித்துவிட்டனர். நல்ல வேளை தவெகவுக்கு அறுதிப் பெரும்பான்மையை கொடுக்காமல் ஜனநாயகத்தை காப்பாற்றியுள்ளனர்.



வரும் தேர்தலில் ஜெயலலிதாவின் ஆட்சியை அமைக்க அவரின் தொண்டர்கள் பாடுபடுவோம். ஜெயலலிதா சொன்னதைப் போல எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், எம்ஜிஆர் ஆரம்பித்த அதிமுகவை அழிக்க முடியாது. எம்ஜிஆர், ஜெயலலிதா காலம் தொட்டு கட்சிக்கு இதுபோன்ற பின்னடைவுகள் ஏற்படுவது வழக்கம். இந்த சோதனைகளை கடந்து வரும் மக்களவைத் தேர்தலில் அதிமுக மிகப்பெரிய வெற்றி பெறும்.

2006ல் விஜயகாந்த் அரசியலுக்கு வந்ததால், திமுக மைனாரிட்டி ஆட்சியமைத்தது. தவெகவை எதிர்த்து தான் காங்கிரஸ் 5 தொகுதிகளில் வெற்றிபெற்றது, அவர்கள் எப்படி இப்போது தவெகவை ஆதரிக்கிறார்கள். விசிக, இடதுசாரிகள் வெளியில் இருந்து தவெகவுக்கு ஆதரவு அளிக்கின்றனர். தவெக அரசு பெரும்பான்மை இல்லாமல் ஊசலாட்டத்தில் உள்ளதால் தான், அமமுகவின் எம்எல்ஏவை அபகரித்துள்ளனர்.

மன்னார்குடியில் அமமுக எம்எல்ஏ தவெகவையும் எதிர்த்து வெற்றிபெற்றவர். அவரின் ஆதரவை எப்படி தவெக பெறலாம். அதிமுகவை ஊழல் கட்சி என்றும், மற்றும் சிலர் என்றும் சொன்ன விஜய், எப்படி அதிமுகவின் 25 எம்எல்ஏக்களின் ஆதரவை பெறலாம். அதிமுகவிலிருந்து சென்று தவெகவை ஆதரிக்கிறார்கள். ஜெயலலிதா ஆட்சி வேண்டும் என்று சொல்பவர்கள், அதிமுகவை அழிக்க நினைக்கும் தவெகவை ஆதரிப்பது எப்படி நியாயமாக இருக்கும்.

நாங்கள் அதிமுக தலைமையிலான பாஜக கூட்டணியில் உள்ளோம். மன்னார்குடி எம்எல்ஏவுக்கு எதாவது தருவதாக சொல்லித்தானே தவெகவுக்கு அழைத்துள்ளீர்கள், அது குதிரை பேரம் தானே. அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்தால், உறுதியாக சிபிஐ விசாரணை கோருவோம். அதன்பின்னர் இந்த ஆட்சிக்கு கஷ்டகாலம் தான். இடதுசாரிகள், விசிக இன்னும் ஆறு மாதங்கள் தாங்குவார்களா?. எனவே தவெக ஆட்சியின் ஆயுள்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவு கொடுத்த 25 எம்எல்ஏக்களின் மீது கட்சித் தாவல் தடை சட்டம் பாய வாய்ப்புள்ளது. அதிமுக பொதுச்செயலாளரால் மட்டுமே கொறடாவை நியமிக்க முடியும் என்பது குறித்து பல நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளன. சபாநாயகரால் இன்னும் எத்தனை நாட்கள் காலம் தாழ்த்த முடியும், அதற்கும் காலக்கெடு உள்ளது. பழனிசாமி தரப்பு நீதிமன்றம் சென்றால் எல்லாம் வெட்டவெளிச்சமாகி விடும்.

அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவளித்தவர்களுக்கு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டால், சிபு சோரன் வழக்கு போல கட்சித்தாவல் சட்டம் பாயும். தவெக அமைச்சர்கள் பற்றி வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் அதிர்ச்சியளிக்கிறது. ரீல்ஸை நம்பி மட்டும் ஆட்சி நடத்த முடியாது.

ஜெயலலிதாவின் ஆட்சியமைக்க, ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும். மனவருத்தங்கள் இருந்தால் பேசித் தீர்க்க வேண்டும். தவெக அதிமுகவை, ஜெயலலிதாவின் இயக்கத்தை அழிக்கப் பார்க்கிறது. அதனை தனிப்பட்ட கோபதாபங்களுக்காக விட்டுக்கொடுக்க கூடாது. அதிமுகவிலிருந்து தவெகவுக்கு ஆதரவு கொடுக்கும் நண்பர்கள் உண்மையை புரிந்துக் கொள்ள வேண்டும்.

திமுக 10 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாமல் இருந்தது. அதுபோல அதிமுக தலைவர்களும் பொறுமை காக்க வேண்டும். எனவே அதிமுக தொண்டர்கள் பெயரை சொல்லி தவெகவுக்கு ஆதரவு கொடுத்தால் வரலாறு அவர்களை மன்னிக்காது. எம்ஜிஆர் தொடங்கிய, ஜெயலலிதா கட்டிக்காத்த இயக்கத்தை விஜய் அழிக்கப்பார்க்கிறார் என்பதே உண்மை. அதற்கு யாரும் பலியாக வேண்டாம். சட்டப்படி பழனிசாமி தான் பொதுச் செயலாளர், அவருக்கு தான் அனைத்து அதிகாரங்களும் உள்ளது.

சட்டைப்பையில் ஜெயலலிதா படத்தை வைத்துக்கொண்டு, அதிமுகவையும், அமமுகவையும் அழிக்க, தவெகவுக்கு ஏஜெண்டாக செயல்படுகிறார். அவர் பழனிசாமியை பார்த்து அம்மாவின் ஆத்மா மன்னிக்காது என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாது. ஜெயலலிதாவின் ஆத்மா செங்கோட்டையனை மன்னிக்காது” என்றார்.

## திருப்பத்தூர் மாவட்ட வனக்கோட்டத்தில் வனவிலங்குகளின் தாகம் தணிக்க 54 குட்டைகளில் தண்ணீர்

திருப்பத்தூர், மே.18-

திருப்பத்தூர் மாவட்ட வனக்கோட்டத்தில் வனவிலங்குகளின் தாகம் தணிக்க 54 குட்டைகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். திருப்பத்தூர் அடுத்த ஜவ்வாதுமலை வனப்பகுதியில் பல்வேறு வகையான மரங்கள், செடி, கொடிகள் மூலிகைகள் உள்ளிட்டவை உள்ளது. இதுதவிர மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காப்புக்காடுகள் காணப்படுகிறது.

கோடைக்காலத்தில் வனப்பகுதியில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வற்றி விடுவதால் வனவிலங்குகள் தண்ணீர், உணவு உள்ளிட்டவற்றை தேடி குடியிருப்பு பகுதிகளுக்குள் வருவதும், அப்போது சில விலங்குகள் வாகனங்களில் அடிபட்டும், கிணற்றில் தவறி விழுந்து உயிரிழக்கும் நிகழ்வுகளும் தொடர் கதையாகி வருகிறது.

இதனை தடுக்கும் வகையில் திருப்பத்தூர் மாவட்ட வனக்கோட்டம் சார்பில் வனப்பகுதியின் பல்வேறு இடங்களில் தண்ணீர் குட்டைகள் அமைக்கப்பட்டு உள்ளன. தற்போது கோடைக்காலம் தொடங்கி வெயில் சுட்டெரித்து வருவதால் வனவிலங்குகளின் தாகம் தணிக்க குட்டை களில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது.

இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், திருப்பத்தூர் மாவட்ட வனக்கோட்டத்தில் பண்ணை குட்டைகள், கசிவுநீர் தொட்டி, தண்ணீர் தொட்டி என 54 உள்ளன. சுட்டெரிக்கும் கோடை வெயில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனவிலங்குகள் கிராமங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் வருவதை தடுக்கும் வகையில் அவற்றின் தாகத்தை தணிக்கும் விதமாகவும் அனைத்து குட்டைகள், தொட்டிகளையும் தண்ணீர் நிரப்பி வைக்கும்படி வனச்சரகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி குட்டைகள், தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது. குட்டைகளில் தண்ணீர் உள்ளதா? என அவற்றை அடிக்கடி கண்காணிக்கும்படி வனச்சரகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது என்றனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# இடுக்கி பெரியாறு புலிகள் காப்பகத்தின் வனப்பகுதிக்குள் மீண்டும் விவசாயம்

## 15 ஆண்டுகளுக்கு பின் புத்துயிர்ப்பு



கூடலூர், மே.18- கேரளம் மாநிலம் இடுக்கி மாவட்டம் பெரியார் புலிகள் காப்பகம் பகுதிக்குள் உள்ள பழங்குடியினர் குடியிருப்புகளில் கைவிடப்பட்டிருந்த விவசாய நிலங்களில் மீண்டும் சாகுபடி தொடங்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளுக்கு பின்பு இந்த முறை பழங்குடியினரின் நிலங்களில் மஞ்சள் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. அம்மாநில வனத்துறையின் முன்னெடுப்பில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், பழங்குடியின மக்களுக்கு பொருளாதார நிலைத்தன்மையை வழங்குவதோடு, மனிதர் வனவிலங்கு மோதல்களை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பெரியாறு புலிகள் காப்பகத்தின் ஐந்து சுற்றுச்சூழல் மேம்பாட்டு குழுக்கள் (ஈடிசி) மூலம் இந்த சாகுபடி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த திட்டத்திற்காக 'அலப்புழா ஃபிங்கர் டர்மெரிக்' (ஏஎபிடி) வகை மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது. பாலியக்குடி பகுதியில் முதற்கட்டமாக 1.5 ஏக்கரில் பரிசோதனை அடிப்படையில் பயிரிடப்பட்டுள்ளது. மொத்தமாக சுமார் 50 ஏக்கரில் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், பழங்குடியினர் குடியிருப்புகளில் மீண்டும் குருமிளகு சாகுபடியை உயிர்ப்பிக்கவும், இலவங்கப்பட்டை, குடம்புளி, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் இஞ்சி போன்ற பயிர்களையும் வளர்க்கும் திட்டம் உள்ளதாக கூறப்பட்டது. இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், ''காட்டுமஞ்சள் வகையும் பரிசோதனை அடிப்படையில் சாகுபடி செய்யப்படுகிறது. காட்டு விலங்குகள் பொதுவாக மஞ்சளை சேதப்படுத்தாததால், இந்தப் பயிருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. முழுமையாக இயற்கை விவசாய முறைகளே பின்பற்றப்படும்'' என தெரிவித்தனர்.

மேலும், காட்டுப் பகுதிக்குள் நடைபெறும் இந்த விவசாயம் பழங்குடியின மக்களுக்கு நிலையான வருமானத்தை ஏற்படுத்தும் என்றும், அதன்மூலம் அவர்கள் வன பாதுகாப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கேற்க உதவும் என்றும் வனத்துறை நம்பிக்கை தெரிவித்துள்ளது. சமீபத்தில் பெய்த கோடை மழையால் மண்ணில் போதிய ஈரப்பதம் ஏற்பட்டுள்ளதால், இம்மாதம் மஞ்சள் நடவு செய்ய ஏற்ற சூழல் நிலவுகிறது. கடந்த ஆண்டு மூணாறு வனப் பிரிவு பகுதியில் கைவிடப்பட்ட நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் சாகுபடி மிகுந்த வெற்றியடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# 10 ஆண்டுகளில் 81 பணிகள் நிறைவு; ஸ்மார்ட் சிட்டி நிறுவனத்தை கலைக்க அரசு உத்தரவு : நகர்ப்புற திட்டமிடலுக்கு பயன்படுத்த எதிர்பார்ப்பு

புதுச்சேரி, மே.18- ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி டெவலப்மென்ட் லிமிடெட் நிறுவனத்தை கலைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது நகர்ப்புறத்தின் உள்கட்டமைப்பு மேம்பாடு, புனரமைப்புக்காக இந்த நிறுவனத்தின் திறனை பயன்படுத்திக்கொள்ளவும், வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. புதுச்சேரியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்துக்கான பத்தாண்டு காலக்கெடு நிறைவடைந்ததால் கடந்த மார்ச் 31ம் தேதி புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி டெவலப்மெண்ட் நிறுவனத்தின் கணக்கை நிறைவு செய்யுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 82 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதில், அவற்றில் 81 திட்டங்கள் இதுவரை நிறைவடைந்துள்ளன. இதில் கடலூர் சாலையில் உள்ள ஏஎப்டி மில் அருகே உள்ள லெவல் கிராசிங்கில் சாலை மேம்பாலம் கட்டும் பணி மட்டுமே நிலுவையில் உள்ள ஒரே திட்டமாகும். இதன் பணிகள் 2025ம் ஆண்டு ஜூலை மாதம் துவங்கி தற்போது நடந்து வருகிறது. திட்டத்தின் மொத்த செலவான ரூ.72 கோடியில், ஸ்மார்ட் சிட்டி நிறுவனமானது தனது முழுப்பங்கான ரூ.52 கோடியை தெற்கு ரயில்வேக்கு மாற்றியுள்ளது. இதை தொடர்ந்து நிறுவனத்தை கலைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் ஸ்மார்ட் சிட்டி சொத்துகள் உள்ளாட்சி நிர்வாக துறைக்கு மாற்றப்படும். தற்போதுள்ள பணியாளர்களும் சொந்த ஊர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களின் பொறுப்புகளும், தாய் துறைகளுக்குள் மறுபகிர்வு செய்யப்பட்டன. அதே நேரத்தில் ஸ்மார்ட் சிட்டி சிறப்பு நோக்க நிறுவனம் (ஷிறிக்ஷி), அதிகப்படியான நகர்ப்புற திட்டங்களை நிர்வகிப்பதற்கான வலுவான திறன்களை வளர்த்துள்ளது. குறுகிய காலக்கெடுவுக்கு திட்டங்களை செயல்படுத்துவதோடு,



திறமையான நகர்ப்புற மேலாண்மை பணியாளர்கள் உருவாவதற்கும் பங்களிக்கிறது. சிறப்பு நோக்க நிறுவன அமைப்புகளை மறுபயன்பாட்டிற்கு உட்படுத்துவது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஓர் அறிவுரையை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, சிறப்பு நோக்க நிறுவனம் சிக்கலான மற்றும் மாறிவரும் நகர்ப்புற சவால்களை எதிர்கொள்வதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆதரவளிக்கலாம். அவற்றின் முக்கியத்துவத்தையும் அங்கீகரித்து, புதுச்சேரி அரசு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு முடிந்த பிறகும், அந்த சிறப்பு நோக்க முகமை தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்யலாம். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, பல மாநிலங்கள் தற்போது ஸ்மார்ட் சிட்டி சிறப்பு நோக்க நிறுவனங்களை எதிர்கால நகர்ப்புற திட்டங்களுக்கான ஆலோசனை மற்றும் செயலாக்க முகமைகளாக மாற்றியுள்ளது, என்றார்.

சிறப்பு நோக்க முகமைகளை தக்கவைத்து கொள்வதையும், அவற்றின் பயன்பாட்டை மாற்றுவதையும் இந்த திசை ஊக்குவித்தாலும், புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் முழு செயல்பாட்டு சூழலமைப்பையும் முடிவுக்கு கொண்டுவரும் திசையில் நகர்வதாக தெரிகிறது. இது ஒரு பெரும் நிறுவன இழப்பாக அமையும். ஸ்மார்ட் சிட்டி நிறுவனத்தின் முன்னாள் அதிகாரி ஒருவரின் கூற்றுப்படி, புதுச்சேரி ஒரு சிறிய யூனியன் பிரதேசம். இங்கு சிக்கலான, உட்கட்டமைப்பு திட்டங்களை கையாளும் திறன் கொண்ட, தொழில்முறை ரீதியாக கட்டமைக்கப்பட்ட நகர்ப்புற திட்ட மேலாண்மை அமைப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் செயல்பாட்டு அனுபவத்துடன் கூடிய, பயிற்சி பெற்ற மனிதவள சூழலை இந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதை கலைப்பது, பயிற்சி பெற்ற மனிதவள இழப்புக்கும் நகர்ப்புற திட்டமிடல் இழப்புக்கும் வழிவகுக்கும், அதன் மூலம் எதிர்கால திட்டங்களை செயல்படுத்தும் திறனை பலவீனப்படுத்தும். திட்டமிடப்பட்டுள்ள பல திட்டங்களுக்கு உலக வங்கி போன்ற முகமைகளுடன் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. தொழில்முறை நிபுணர்களை கொண்ட ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் அத்தகைய திட்டங்களை திறமையாக செயல்படுத்தும் நகர்ப்புற முகமையாக உருவெடுக்க முடியும். புதிய அரசாங்கம், ஒரு குறிப்பிட்ட பணிக்கான தற்காலிக அமைப்பாக மட்டும் கருதாமல், ஒரு நீண்டகால பார்வையை கொண்டிருக்க வேண்டும், என்றார்.

# ராமநத்தம் அருகே நெடுஞ்சாலையோரம் கொட்டப்படும் குப்பைகளால் நோய் பரவும் அபாயம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

திட்டக்குடி, மே.18- கடலூர் மாவட்டம் ராமநத்தத்தை அடுத்து கல்லூர் ஊராட்சி உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் இருந்து திட்டக்குடி செல்லும் மாநில நெடுஞ் சாலையும் உள்ளது. இந்த சாலையின் வழியாக சுமார் 50க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு அரசு பேருந்துகள், பள்ளி வாகனங்கள், இருசக்கர வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் நடந்தும் செல்கின்றனர். இந்த ஊராட்சியில் உள்ள வீடுகள் அருகில், அப்பகுதியில்



உள்ள 100க்கும் மேற்பட்ட கடைகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொண்டு வந்து இந்த சாலையோரம் குவியல், குவியலாக கொட்டி வருகின்றனர். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், நோய் தொற்று ஏற்படும் அபாயமும் உள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் சாலை ஓரம் கொட்டப்படும் குப்பைகளை அகற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். மீண்டும் அதே இடத்தில் குப்பை கொட்டாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை எடுத்துள்ளனர்.

# தேவதானப்பட்டி முருகமலை அடிவாரத்தில் புதிய தடுப்பணைகள் கட்டப்படுமா?

## விவசாயிகள் எதிர்பார்ப்பு

தேவதானப்பட்டி, மே.18- தேவதானப்பட்டி அருகே முருகமலை அடிவார பகுதியில் புதிய தடுப்பணைகள் கட்ட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தேவதானப்பட்டி முருகமலை அடிவாரப்பகுதி தேவதானப்பட்டியில் ஆரம்பித்து, பெரியகுளம் வரை 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு உள்ளது. பருவமழை காலங்களில் முருகமலையில் பெய்யும் மழைநீர் 100க்கும் மேற்பட்ட ஓடைகள் வழியாக தெற்கு நோக்கி செல்கிறது. இந்த நீர்வழித்தட ஓடைகளை மறித்து குறுக்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.



இதன்மூலம் நிலங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் நடந்து வந்தது. இந்நிலையில், தடுப்பணைகளில் மண் மேவியதால் தண்ணீர் தேக்க முடியவில்லை. மேலும் முறையான பராமரிப்பு இல்லாததால் தடுப்பணைகள் சேதமடைந்துள்ளன. இதனால், மழைக்காலங்களில் தண்ணீரை சேமிக்க முடியாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே சேதமடைந்துள்ள தடுப்பணைகளை சீரமைப்பதோடு புதிதாக தடுப்பணைகள் கட்ட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தரிசு நில மேம்பாட்டு திட்ட விவசாய குழுவினர் கூறுகையில், தமிழகத்தில் மீண்டும் தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை விவசாயிகளின் நலன் கருதி தொடங்க வேண்டும். அதன் மூலம் தமிழகத்தில் பல லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் மீண்டும் பயிர் சாகுபடி நிலங்களாக மாறும்' என்றனர்.

# விடுமுறை தினத்தையொட்டி ஏற்காடு, ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலா பயணிகள்

ஏற்காடு, மே.18- விடுமுறை தினமான நேற்று ஏற்காடு, ஒகேனக்கல்லில் சுற்றுலாப்பயணிகள் கூட்டம் அலைமோதியது. சேலம் மாவட்டத்தில் முக்கிய சுற்றுலா தலமான ஏற்காட்டிற்கு ஆண்டு முழுவதும் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக கோடை காலத்தில் சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகமாக இருக்கும். இதன்படி அந்த ஆண்டும் தமிழகம் மட்டுமின்றி, கர்நாடகா, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். கடந்த சில நாட்களாக ஏற்காட்டில் மிதமான சாரல் மழையால் ஜில் கிளைமேட் நிலவுகிறது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினமான இன்று காலை முதலே ஏற்காட்டிற்கு, பைக் மற்றும் கார்களில் குடும்பம் குடும்பமாக வந்து குவிந்தனர்.



அங்குள்ள அண்ணா பூங்கா, ஏரி பூங்கா, ரோஜா தோட்டம், காட்சி முனையம், சேர்வராயன் கோயில் உள்ளிட்ட இடங்களில் குவிந்தனர். படகு இல்லத்தில் நீண்ட வரிசையில் நின்று டிக்கெட் எடுத்து குடும்பத்துடன் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். ஏற்காட்டில் கோடைவிழாவுக்காக முன்னேற்பாடு பணிகள் நடந்து வருகிறது. அதற்காக பூங்காக்களில் வைக்கப்பட்டுள்ள வண்ண செடிகளுக்கு இடையே நின்று ஆர்வமுடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். சுற்றுலாபயணிகள் வருகையால் நகரின் பல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், ஓட்டல், பேக்கரி, சாலையோர கடைகளில விற்பனை களை கட்டியது.

இதேபோல் தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் விடுமுறை தினமான நேற்று பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் கார், வேன் உள்ளிட்ட வாகனங்களில் குவிந்தனர். அயில் மசாஜ் செய்தும், அருவி, ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். மேலும் பரிசல் சவாரி செய்து காவிரியின் அழகை ரசித்தனர். அங்குள்ள பூங்கா, முதலை பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டு, மீன் கடைகளில் சுவையான மீன்களை வாங்கி ருசித்தனர்.

சேலம் மாவட்டம் மேட்டூருக்கும் சுற்றுலாபயணிகள் அதிக அளவில் வந்தனர். அவர்கள் காவிரியில் நீராடி, அணைக்கட்டு முனியப்பனை வழிபட்டனர். பின்னர் அணை பூங்காவில் உற்சாகத்துடன் பொழுதை கழித்தனர். அதேபோல இடைப்பாடி பூலாம்பட்டிக்கு ஏராளமானோர் வந்திருந்த நிலையில் ஆற்றில் விசைப்படகு சவாரி சென்று மகிழ்ந்தனர்.

# பைக் மீது அரசு பேருந்து மோதி விபத்து: ஒரே குடும்பத்தைச் சார்ந்த மூவர் உடல்நசுங்கி பலி

புதுவை, மே.18- புதுவை அருகே அதிவேகமாக வந்த தமிழக அரசு ஏசி சொகுசு பேருந்து, பைக் மீது மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. விபத்து காரணமாக இசிஆரில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் மண்டவாய் புதுக்குப்பம் அடுத்த ஆலம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் சேஷாத்ரி மகன் சிலம்பரசன் (29), திருமணம் ஆகவில்லை. இவருக்கு கையில் அடிபட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிலம்பரசனுக்கு மாவு கட்டு போடுவதற்காக இன்று காலை புதுச்சேரி அபிஷேகப்பாக்கம் பகுதிக்கு சிலம்பரசனின் அக்கா கணவர் ஸ்டாலின் (37) என்பவர் மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தார்.

சிலம்பரசனின் மற்றொரு அக்கா கணவர் கார்த்திகேயன் (33) என்பவரும் அவர்களுடன் பைக்கில் வந்துள்ளார். பெரியமுதலியார் சாவடி கலால் சோதனை சாவடி அருகே மூவரும் வந்து



கொண்டிருந்தபோது பின்னால் தமிழ்நாடு அரசு ஏசி சொகுசு பேருந்து சென்னையில் இருந்து புதுவை நோக்கி வந்தது. எதிர்பாராதவிதமாக முன்னால் சென்ற கார் மீது பயங்கரமாக பேருந்து மோதியது. பேருந்து மோதிய வேகத்தில் கார் இடது பகுதியில் இருந்த ஒரு காலி மனையில் புகுந்து நின்றது. அடுத்து அதே பேருந்து ஸ்டாலின் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் மீது வேகமாக மோதியது.

இதில் பைக்கில் இருந்த மூன்று பேரும் பேருந்தின் முன்பக்க பகுதி அடியில் சிக்கினர். மேலும் மூன்று பேரையும் மோட்டார் சைக்கிள் உடன் சேர்த்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் பேருந்து இழுத்துச்சென்றது. அதில் மூன்று பேரும் பேருந்து அடியில் சிக்கி உடல் நசுங்கி பரிதாபமாக பலியாயினர். உடனே பேருந்தை ஓட்டிவந்த முருகேஸ்வரன் (30) என்பவர் பேருந்தை நிறுத்தி விட்டு தப்பி ஓடிவிட்டார். பின்னர் அவர் புதுவை உருளையன்பேட்டை போலீசில் சரணடைந்தார்.

விபத்து குறித்து அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து புதுச்சேரி கனகசெட்டிகுளம் தனியார் மருத்துவமனைக்கு மூன்று உடல்களையும் அனுப்பி வைத்தனர்.ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் விபத்தில் சிக்கி மூன்று பேர் பலியான சம்பவம் அறிந்த அவர்களது உறவினர்கள் மருத்துவமனையில் வந்து உடலை பார்த்து கதறி அழுதனர். பேருந்து மோதிய விபத்தில் காரில் பயணம் செய்த காரில் பயணம் செய்த ஹைதராபாத்தை சேர்ந்த ஐடி ஊழியர்கள் ஐந்து பேருக்கு ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. இதில் சம்பத் போயினி என்பவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. சம்பத் போயினி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இன்று அதிகாலை 4.00 மணிக்கு நடந்த இந்த கோர விபத்தால் சென்னை புதுச்சேரி இடையே இசிஆரில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# மூடப்படுவதாக அரசாணை வெளியிடப்பட்ட விழுப்புரம் டாஸ்மாக் கடைக்கு லாரியில் பெட்டி, பெட்டியாக வந்து இறங்கிய மதுபாட்டில்கள்: பொதுமக்கள் அதிர்ச்சி

விழுப்புரம், மே.18- விழுப்புரத்தில் தமிழக அரசு மூடுவதாக அரசாணை வெளியிட்ட டாஸ்மாக் கடைக்கு லாரியில் மது பாட்டில்கள் பெட்டி, பெட்டியாக கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசு தனது தேர்தல் வாக்குறுதிப்படி மகளிருக்கு ரூ.2500 நிதி உதவி. தமிழகம் முழுவதும் மகளிர் இலவச பேருந்து பயணம் போன்ற எந்த திட்டங்களையும் ஆட்சிக்கு வந்து செயல்படுத்தவில்லை. இந்த நிலையில் கடந்த திமுக அரசு செயல்படுத்திய மகளிர் உரிமைத் தொகை ரூ.ஆயிரம் ரொக்க பணத்தையும் வழங்குவதில் இழுத்தடிப்பு செய்து கடும்



எதிர்ப்புகளுக்கு பணிந்து ரூ.ஆயிரம் மகளிர் கணக்கில் தாமதமாக வரவு வைக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் தமிழகம் முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிறுவனங்கள், பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கும் டாஸ்மாக் கடைகள் கணக்கெடுக்கப்பட்டு 717 டாஸ்மாக் கடைகளை மூடுவதாகவும் இரண்டு வாரங்களில் இந்த கடைகள் மூடப்படும் என்று முதலமைச்சர் அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 192 கடைகள் செயல்பட்ட நிலையில் 11 கடைகள் மூடுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பட்டியலில் வழிபாட்டுதலங்கள், பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட மக்கள் புகார் கூறிய இடங்களில் டாஸ்மாக் கடைகள் மூடவில்லை என்ற அதிருப்தியும் எழுந்தது.

இந்த நிலையில் மூடுவதாக அறிவித்த டாஸ்மாக் கடைகளுக்கு மீண்டும் லாரியில் பெட்டி பெட்டியாக மதுபாட்டில்கள் வந்து இறங்கியது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விழுப்புரம் நகரில் ரயில்நிலையம் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள டாஸ்மாக் கடையால் தொடர்ந்து போக்குவரத்து நெரிசலும், அப்பகுதி கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு வாசிகள் பாதிக்கப்பட்டு வந்தனர். தற்போது இந்த கடை மூடப்படுவதாக அரசாணை வெளியிட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்த அறிவிப்பு வந்த மறுநாளே கடைகளில் மது வாங்குவதற்காக குடிமகன்களும் படையெடுத்தனர். கடையில் உள்ள சரக்கு தீரும் வரை கடை செயல்படும். அதன் பிறகு தான் மூடப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் கடையில் உள்ள சரக்கு அனைத்தும் காலியான நிலையில் நேற்று லாரியில் பெட்டி, பெட்டியாக பீர், பிராந்தி உள்ளிட்ட மது பாட்டில்கள் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனைப் பார்த்த பொதுமக்கள், அங்கிருந்த வணிகவளாக உரிமையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடையில் சரக்கு தீர்ந்ததும் சீல் வைப்பார்கள் என்று கூறிய நிலையில் மீண்டும் லாரியில் பெட்டி பெட்டியாக மதுபாட்டில்கள் வந்து இறங்குவது உண்மையிலேயே தமிழக அரசு கூறியபடி இந்த டாஸ்மாக் கடை மூடப்படுமா அல்லது கண்துடைப்பா என கேள்வி எழுப்பி உள்ளனர்.

# பல ஆண்டுகளுக்கு முன் 6 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்தும் விஜயநகர் பேருந்து நிலையத்தை இடம் மாற்றும் பணிகள் தொய்வு: நெரிசலில் திணறும் வேளச்சேரி

சென்னை, மே.18-

சென்னை மாநகரின் மிக முக்கியமான மற்றும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதிகளில் ஒன்றாக வேளச்சேரி விஜயநகர் சந்திப்பு விளங்குகிறது. இந்த விஜயநகர் சந்திப்பு என்பது தென் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை இணைக்கும் ஒரு மையப்புள்ளியாக உள்ளது. எனினும், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் குறுகலான சாலை அமைப்பால் இப்பகுதியில் பேருந்துகளை நிறுத்தி இயக்குவதில் பெரும் சிக்கல்கள் நீடிக்கின்றன. தற்போதைய பேருந்து நிலையம், விஜயநகர் சந்திப்புக்கு மிக அருகிலேயே இருப்பதால், பேருந்துகள் வெளியே வரும்போதும் உள்ளே செல்லும்போதும் சாலையில் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது.

மேலும், போதிய இடவசதி இல்லாததால், பயணிகள் சாலையிலேயே நின்று பேருந்து ஏற வேண்டிய நிலை உள்ளது. இது விபத்துகளுக்கு வழிவகுப்பதோடு, பொதுமக்களுக்கும் இடையூறாக அமைகிறது. இந்நிலையில், விஜயநகர் சந்திப்பு பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், பயணிகளின் வசதியை மேம்படுத்தவும் மாநகர போக்குவரத்து கழகம் ஒரு முக்கிய முடிவை எடுத்தது. அதன்படி, விஜயநகர் சந்திப்பில் தற்போது செயல்பட்டு வரும் பேருந்து நிலையத்தை, வேளச்சேரி பறக்கும் ரயில் நிலையம் அருல் மாற்ற திட்டமிடப்பட்டது. இதற்காக, வேளச்சேரி ரயில் நிலையத்திற்கு தெற்கு பகுதியில், 6 ஏக்கரில் இடம் தேர்வு செய்து, அங்கு பல ஆண்டுகளுக்கு முன், அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது.

தற்போது, வேளச்சேரி ரயில் நிலையத்திற்கும், பேருந்து நிலையத்திற்கும் நீண்ட தூர இடைவெளி இருப்பதால், பயணிகள் கால்கடுக்க நடந்து செல்லும் நிலை உள்ளது. இந்நிலையில், இந்த இடமாற்றம் மூலம் பேருந்து நிலையம், ரயில் நிலையத்திற்கு அருகில் அமைவதால், ரயிலில் வரும் பயணிகள் எளிதாகப் பேருந்து வசதியைப் பெற முடியும். அதேபோல் பேருந்தில் வருபவர்கள் உடனடியாக ரயில் நிலையத்திற்குச் செல்ல முடியும். இந்த ஒருங்கிணைப்பு பயண நேரத்தை கணிசமாகக் குறைக்கும். விஜயநகர் சந்திப்பை விட ரயில் நிலையப் பகுதியில் அதிக நிலப்பரப்பு கிடைப்பதால், அதிகப்படியான பேருந்துகளை நிறுத்தி வைக்கவும், பயணிகளுக்கான காத்திருப்பு அறைகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் வாய்ப்பு உள்ளது.

இந்த இடமாற்ற திட்டத்தை அமல்படுத்த, கடந்த திமுக ஆட்சியில் மாநகர போக்குவரத்துக் கழகம் மற்ற அரசுத் துறைகளுடன் இணைந்து செயல்பட்டது. குறிப்பாக, புதிய இடத்தை தயார்



செய்தல், சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் போக்குவரத்து பாதைகளை மறுசீரமைத்தல் போன்ற பணிகள் முடுக்கிவிடப்பட்டது. தற்காலிகமாக பேருந்துகள் நிறுத்தப்படும் இடங்கள் மற்றும் புதிய வழித்தடங்கள் குறித்து பயணிகளுக்குத் தெளிவான அறிவிப்புகளை வழங்கவும் அதிகாரிகள் திட்டமிட்டனர். இந்த திட்டம் நடைமுறைக்கு வரும்போது வேளச்சேரி சந்திப்பில் 50% வரை போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்புள்ளதாக போக்குவரத்து நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஆனால், ஆட்சி மாற்றத்திற்கு பிறகு இந்த பேருந்து நிலையத்தை இடமாற்றும் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, இதற்கான முதற்கட்ட பணிகளை கூட தொடங்காததால், இந்த திட்டம் எப்போது தொடங்கி எப்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுமோ என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. இதுகுறித்து பயணிகள் கூறுகையில், ‘சென்னை போன்ற ஒரு வளர்ந்து வரும் பெருநகரத்தில், பொதுப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது என்பது காலத்தின் தேவையாகும். வேளச்சேரி பேருந்து நிலைய இடமாற்றம் என்பது வெறும் இடமாற்றமாக மட்டும் இல்லாமல், ஒரு நவீன மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதிக்கான தொடக்கமாக இருக்க வேண்டும்.

இதன் மூலம் வேளச்சேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களின் நீண்ட கால போக்குவரத்துப் பிரச்சனைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். தற்போது விஜயநகர் சந்திப்பில் பேருந்துகள் நுழைவு மற்றும் வெளியேறும் நேரங்களில் கடுமையான வாகன நெரிசல் உருவாகி வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் அரசு பேருந்துகள் இயங்கும் நிலையில், சாலைகளின் குறுகலான அமைப்பு போக்குவரத்தை மேலும் சிக்கலாக்குவதாக கூறப்படுகிறது. இதனால் பயணிகள் மற்றும் பாதசாரிகளும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். வேளச்சேரி ரயில் நிலையத்திற்கு அருகில் பேருந்து நிலையத்தை இடமாற்றம் செய்வதால், ரயில் மற்றும் பேருந்து சேவைகளுக்கு இடையிலான இணைப்பு மேம்படும்.

இதன் மூலம் பயணிகள் ஒரு போக்குவரத்து சேவையிலிருந்து மற்றொன்றுக்கு எளிதாக மாறிச் செல்ல முடியும். எனவே, இந்த திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். புதிய இடத்தில் கூடுதல் பேருந்து நிறுத்த வசதிகள், காத்திருப்பு நிலையங்கள், நடைபாதைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் உருவாக்க வேண்டும். முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளும் ஏற்படுத்த வேண்டும்,’ என்றனர்.

இது குறித்து போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறுகையில், ‘பரங்கிமலை வேளச்சேரி கடற்கரை மேம்பால ரயில் இணைப்புக்கு பின், வேளச்சேரிக்கு ரயில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தினசரி பயணிப்பவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்தை தாண்டியுள்ளது. இது மேலும் அதிகரிக்கும் நிலை உள்ளது.

இவற்றை கருத்தில் கொண்டு ரயில் நிலையம் அருகே, மாநகர போக்குவரத்து கழகத்துக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலத்தில் வணிக வளாகத்துடன் வடிய புதிய பேருந்து முனையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் விரைவில் நடத்தப்படும். அதன்பின், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். அதை தமிழக அரசிடம் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்படும். இந்த பேருந்து முனையத்தில் டீசல் பேருந்துகள், மின்சார பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதி செய்யப்படும். பொழுதுபோக்கு அம்சங்களும் இடம்பெறும். இந்த புதிய பேருந்து நிலையத்தில் இருந்து கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம், மேடவாக்கத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு மினி பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது,’ என்றனர்.

## திருத்தணி முருகன் கோயிலில் முறையான பராமரிப்பில்லாததால் சரவணப்பொய்கை குளத்தில் துர்நாற்றம் வீசும் தண்ணீர்

### தனியார் மண்டபங்களில் குளிக்கும் பக்தர்கள்

திருத்தணி, மே.18-

திருத்தணி முருகன் கோயில் சரவணப் பொய்கை திருக்குளம் முறையான பராமரிப்பின்றி தண்ணீர் மாசடைந்து துர்நாற்றம் வீசுவதால், பக்தர்கள் ரூ.30 கொடுத்து தனியார் மண்டபங்களில் குளித்து விட்டு கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடாக சிறப்பு பெற்ற திருத்தணி முருகன் கோயிலுக்கு, தமிழ்நாடு மட்டுமின்றி பிற மாநிலங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து, சாமி தரிசனம் செய்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர். பக்தர்கள் வேண்டுதல் நிறைவேற்றும் வகையில் மொட்டை அடித்து, முருகன் கோயில் குளத்தில் குளித்து விட்டு படிகள் வழியாக மலைக்கு சென்று சாமி தரிசனம் செய்கின்றனர்.

சரவண பொய்கை திருக்குளம் கடந்த ஆண்டு ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி சீரமைக்கப்பட்டது. இருப்பினும், முறையாக பராமரிப்பு மேற்கொள்ளாததால், மழையின் போது மழைநீருடன் கழிவுநீர் கலந்து குளத்தில் நிரம்புகிறது. மேலும், பக்தர்கள் வேண்டுதல் நிறைவேற்றும் வகையில் குளத்தில் வெல்லக் கட்டிகள் வீசுவது, காவடிகளில் இருந்து மலர் மாலைகள் வீசுவது, பூஜை பொருட்களை குளத்தில் போடுவதால் தண்ணீர் நிறம் மாறி துர்நாற்றம் வீசுகிறது.

இதனால், மொட்டை அடிக்கும் பக்தர்கள் மற்றும் கோயிலுக்கு செல்வோர் கோயில் குளத்தில் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மொட்டை அடித்துக் கொள்ளும் பக்தர்கள் குளம் அருகில் தனியார் மண்டபங்களுக்கு சென்று ரூ.30 செலுத்தி குளித்து விட்டு கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

குளத்தில் பைப் லைன்கள் வீண்

பக்தர்கள் வீசும் மலர் மாலைகள், பூஜை பொருட்களால் குளத்தில் தண்ணீர் கருப்பு நிறமாக மாறி குளிக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால், பக்தர்கள் வசதிக்காக குளத்தை சுற்றி இரும்பு வேலி அமைத்து மின் மோட்டார் மூலம் குழாய்களில் குளிக்க வசதிகள் செய்யப்பட்டும் முறையாக பயன்பாட்டில் இல்லை. எனவே, சிறப்பு பெற்ற சரவண பொய்கை திருக்குளத்தில் பக்தர்கள் குளிக்க ஏதுவாக அவ்வப்போது குளத்திலிருந்து நீர் அகற்றி தூய்மையாக வைத்திருப்பதை இந்து சமய அறநிலையத்துறை உறுதிப்படுத்த வேண்டும். மழை நீருடன் கழிவுநீர் குளத்தில் கலப்பதை தடுக்க வேண்டும் என்பது பக்தர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் கே.ராஜன்(85) அடையாறு ஆற்றில் குதித்து தற்கொலை!

சென்னை, மே.18-

தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் கே.ராஜன்(85) அடையாறு ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார். தீயணைப்புத் துறையினர் கே.ராஜன் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கே.ராஜன் 'பிரம்மச்சாரிகள்' (1983) திரைப்படத்தின் மூலம் தயாரிப்பாளராகத் தனது திரைப்பயணத்தைத் தொடங்கினார். கணேஷ் சினி ஆர்ட்ஸ் மூலம் பல திரைப்படங்களை தயாரித்த ராஜன், ஸ்ரீமன், அபிதா, அப்பாஸ் மற்றும் குணால் நடித்த 'உணர்ச்சிகள், மற்றும் 'நம்ம ஊரு மாரியம்மா' உள்ளிட்ட படங்களை இயக்கியும் உள்ளார். அவள் பாவம், நினைக்காத நாளில்லை, டபுள்ஸ் உள்ளிட்ட பல படங்களை தயாரித்தவர்.



பாம்பு சட்டை, துணிவு, பரகாசுரன் போன்ற படங்களிலும் நடித்துள்ளார். கடந்த 2000ம் ஆண்டில் சென்னை திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்து, சினிமா வர்த்தகத்தில் முக்கியப் பங்காற்றினார். சினிமா துறையில் நடைபெறும் பிரச்சனைகள், தயாரிப்பாளர்கள் சந்திக்கும் நஷ்டங்கள், நடிகர்களின் அதிக சம்பளம் மற்றும் திரையுலகில் உள்ள முறைகேடுகள் குறித்து எந்த தயக்கமும் இன்றி பொதுவெளியில் பேசி வந்தார். இதனால் அவரது பேச்சுகள் அடிக்கடி சமூக வலைதளங்களில் வைரலாகி வந்தன.

இந்நிலையில் கே.ராஜன் இன்று (மே.17) அடையாறு ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். தீயணைப்புத் துறையினர் கே.ராஜன் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தற்கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## குளச்சல் பகுதியில் பலத்த காற்று: கடற்கரைக்கு செல்ல பொதுமக்களுக்கு தடை

குளச்சல், மே.18-

குளச்சல் கடற்கரை கிராமத்தில் விசைப் படகுகள், வள்ளம்,கட்டுமரங்கள் வழக்கம்போல் மீன் பிடித்து வருகின்றன.இந்நிலையில் தென் தமிழக கடற்கரை,குமரி கடல் பகுதியில் காற்றின் வேகம் மணிக்கு 40 கி.மீ. முதல் 50 கி.மீ.வரையிலும், இது அதிகரித்து 60 கி.மீ.வரை பலத்த காற்று வீசும் எனவும் , மீனவர்கள் 15 ம் தேதி முதல் 20 ம் தேதிவரை மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் எனவும் சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை



விடுத்துள்ளது.

இந்த வானிலை எச்சரிக்கை மீன் துறை மூலம் அனைத்து மீனவர் கிராமங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது. நேற்று காலை முதல் குளச்சல் கடல் பகுதியில் பலத்த காற்று வீசி வருகிறது.ராட்சத அலைகள் எழுந்து மணற்பரப்பையும் தாண்டி விடுகிறது. இதனால் வள்ளம்,கட்டுமரங்கள் மீன் பிடிக்க செல்லவில்லை. அவை மணற்பரப்பில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குளச்சல் கடற்கரையில் மாலை வேளைகளில் பொழுது போக்கிற்காக பொதுமக்கள் கடற்கரைக்கு வந்து செல்வதுண்டு.

அவர்கள் ஆர்வ மிகுதியில் அலை வந்து செல்லும் பகுதிக்கு செல்லாமலிருக்க குளச்சல் மரைன் போலீசார் கடற்கரை நுழைவு வாயிலில் கயிறு கட்டி அதில் சிவப்பு துணி கட்டி கடற்கரைக்கு செல்ல தடை விதித்துள்ளனர். மேலும் கடற்கரையில் பாதுகாப்புக்கு மரைன் போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

## ‘கிளாண்டர்ஸ்’ தொற்றால் குதிரை உயிரிழப்பு: நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

சென்னை, மே.18-

மனிதர்களுக்கும் பரவும் தன்மை கொண்ட ‘கிளாண்டர்ஸ்’ தொற்று பாதிப்பால் சென்னையில் சவாரிக்காக பயன்படுத்தப்பட்ட குதிரை உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தத் தீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் குதிரை சவாரிக்குப் பயன்படுத்தப்படும் குதிரை ஒன்று உடல்நலக்குறைவால் பலவீனமடைந்த நிலையில், அதன் உரிமையாளர் பெசன்ட் மெமோரியல் கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளார். அந்த குதிரையைப் பரிசோதித்த மருத்துவர்கள் அதன் உடலில் பல இடங்களில் புண்கள், வீங்கிய கட்டிகள், கடுமையான சதை சுருக்கம் போன்ற அறிகுறிகளை கண்டறிந்தனர்.

இதையடுத்து, கிளாண்டர்ஸ் நோய் பாதிப்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஐசிஏஆர் தேசிய குதிரை ஆராய்ச்சி மையத்தின் (என்ஆர்சிஇ) ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டன. அந்த



மாதிரிகளப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் ‘கிளாண்டர்ஸ்’ நோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதாகத் தகவல் வெளியானது. இந்நிலையில், நோய் தொற்றுக்குள்ளான குதிரை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. இதையடுத்து, தேசிய குதிரை ஆராய்ச்சி மையம் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறைக்கு அவசர அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. அதில், பாதிக்கப்பட்ட குதிரையுடன் இருந்த அனைத்து குதிரைகளையும் உடனடியாகத் தனிமைப்படுத்த வேண்டும், அருகிலுள்ள பகுதிகளில் உள்ள அனைத்து விலங்குகளுக்கும் பரிசோதனை நடத்த வேண்டும், நோய் பரவலை கட்டுப்படுத்த தீவிரமான கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாகச் சென்னையில் சவாரிக்காக பயன்படுத்தப்படும் சுமார் 140 குதிரைகளிடமிருந்து மாதிரிகள் சேகரித்து பரிசோதனை செய்ய வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சென்னை மாநகராட்சி சார்பில் சென்னையில் குதிரைகள் வளர்க்கப்படும் இடங்களில் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. கிளாண்டர்ஸ் நோய் பரவல் தொடர்பாக பொதுமக்கள், குறிப்பாக குதிரைகள் அதிகமாக பராமரிக்கப்படும் பகுதிகளில் உள்ளவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட விலங்குகளை தொடாமல் உடனடியாக கால்நடை மருத்துவ அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோவையிலும் இதற்கு முன்பு இதேபோன்ற ஒரு கிளாண்டர்ஸ் நோய் பாதிப்பு பதிவாகியிருந்தது என அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. அப்போது, பாதிக்கப்பட்ட குதிரை வழக்கமான நடைமுறைகளின் படி அகற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே, கர்நாடக மாநிலத்தில் கிளாண்டர்ஸ் தொற்றால் குதிரைகள் பாதிக்கப்பட்டபோது குதிரை சவாரிகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நத்தமலை கிராமத்தில் பாசன வாய்க்கால் ஷெட்டர் சேதம்; பாசனத்திற்கு வீராணம் தண்ணீர் விடாததால் வாடி வதங்கும் வெற்றிலை பயிர்கள்: விவசாயிகள் வேதனை

சேத்தியாத்தோப்பு, மே.18-

காட்டுமன்னார்கோவில் வட்டத்திற்கு உட்பட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெற்றிலை சாகுபடி பல ஆண்டுகளாக விவசாயிகள் செய்து வரும் நிலையில் பாசனத்திற்கு வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடாததால் வெற்றிலைப் பயிர்கள் வாடி வதங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே உள்ள வீராணம் ஏரியை ஒட்டிய கிராம பகுதிகளான கந்தகுமாரன், ராய நல்லூர், மானியம் ஆடூர், நத்தமலை, லால்பேட்டை உள்ளிட்ட காட்டுமன்னார்கோவில் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பல ஆண்டுகளாக வீராணம் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் பெற்று விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்து வருகின்றனர்.

இங்கு சாகுபடி செய்து அறுவடை செய்யப்படும் வெற்றிலை வெளி மாவட்டங்களுக்கும், நகரப்புறங்களுக்கும் ஏற்றுமதி செய்து கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில் தேர்தல் துவங்கிய சில மாதங்களாக நத்தமலை கிராமத்திற்கு செல்லும் பிரதான பாசன வாய்க்கால் மூலம் விவசாயிகள் வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் பெற்று வெற்றிலை சாகுபடி செய்து வந்த நிலையில் நத்தமலை கிராமத்திற்கு செல்லும் முகப்பு பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு புதிய பாலம் கட்டுவதற்காக ஒப்பந்ததாரர்கள் பணி செய்தபோது பாசனத்திற்கு செல்லும் வாய்க்காலை செம்மண் மூட்டைகளை கொண்டு அடைத்தனர். மேலும் நத்தமலை கிராம விவசாயிகள்



பாசனத்திற்கு பயன்படுத்தி வந்த ஷட்டரையும் ஒப்பந்ததாரர்கள் சேதப்படுத்திவிட்டு சென்றுவிட்டனர்.

அதன் பின்னர் கிராம விவசாயிகள் ஒன்றிணைந்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் வெற்றிலை சாகுபடிக்கு பாசனத்திற்கு தண்ணீர் வராததால் வெற்றிலைக் கொடிகள் வாடி வதங்கி வந்ததால் பாசனத்திற்கு விரைந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்து வருவதாகவும், வெற்றிலை சாகுபடி செலவு அதிகம் என்பதாலும் வெற்றிலைப் பயிருக்கு கடன் வசதி மற்றும் காப்பீடும் கிடைப்பதில்லை என்பதால் வெற்றிலைப் பயிரிடும் விளைநில பரப்பளவு குறைந்து வருகிறது.

வேளாண்துறை அதிகாரிகள் வெற்றிலைப் பயிரிடும் விவசாயிகளை முறைப்படி ஊக்கப்படுத்தாததால் பயிர் செய்வது குறைகிறது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாததால் நோய் தாக்கமும் அதிகரித்து வெற்றிலை பயிர்கள் வாடி வதங்கி கருகி வருகிறது. சாகுபடி குறைந்து வருவதால் வெற்றிலை சார்ந்த மதிப்பு கூட்டல் பொருட்கள் தயாரிப்பை புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு ஊக்கப்படுத்த வேண்டும் என்று கூறினர். எனவே வெற்றிலை பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்துவதோடு அல்லாமல் சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளில் பயன்பாட்டை அதிகரித்து வெற்றிலை பயிருக்கான சந்தையை உருவாக்கி வெற்றிலை விவசாயத்தை காப்பாற்றலாம் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

எனவே மாவட்ட நிர்வாகமும், புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசும் சேதமடைந்துள்ள பாசன வாய்க்காலின் ஷட்டரை சீரமைத்து தூர்வாரி வீராணம் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டு நத்தமலை கிராமத்தில் வெற்றிலைப் பயிரிடும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.






# சிபிஎஸ்இ பொதுத்தேர்வில் வேல்ஸ் பப்ளிக் ஸ்கூல் சாதனை! சஞ்சய் வசந்த், மதுபிரியா 96% மதிப்பெண்களுடன் முதலிடம்

சங்கரன்கோவில், மே.18-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், வடக்கு புதூர் வேல்ஸ் பப்ளிக் ஸ்கூல் 2025-2026 ஆம் கல்வியாண்டு சிபிஎஸ்இ (CBSE) 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் நூறு சதவீதத் தேர்ச்சியுடன் மாபெரும் சாதனை படைத்துள்ளது.

இத்தேர்வு முடிவில், பள்ளி மாணவன் சஞ்சய் வசந்த் மற்றும் மாணவி மதுபிரியா ஆகியோர் 96% மதிப்பெண்கள் பெற்று பள்ளியளவில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

மாணவன் சஞ்சய் வசந்த் கணித பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்களும், மாணவி மதுபிரியா கணக்குப்பதிவியல் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்களும் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

சாதனை படைத்த மாணவ, மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களை வேல்ஸ் பள்ளியின் தாளாளர் சண்முகசாமி, பள்ளி முதல்வர் ஜெயபாரதி ஆகியோர் நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து, இனிப்புகள் வழங்கி கௌரவித்தனர். இந்த நெகிழ்ச்சியான நிகழ்வில் பள்ளி துணை முதல்வர் அகல்யா, ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் கலந்துகொண்டு மாணவர்களின் எதிர்கால வெற்றிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.




# கோவில்பட்டியில் அஞ்சல் துறை சாதனையாளர்களுக்கு விருது மழை! கண்காணிப்பாளர் சுரேஷ் குமார் கௌரவம்

கோவில்பட்டி மே.18-

2025-2026 நிதியாண்டில் சிறப்பாகச் சேவையாற்றிய அலுவலர்களுக்கான "கோட்ட சாதனையாளர்கள் விருது வழங்கும் விழா" கோவில்பட்டியில் நடைபெற்றது.

கோவில்பட்டி அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் செ. சுரேஷ் குமார் தலைமை தாங்கி, செல்வமகள் சேமிப்பு, டிஜிட்டல் பரிவர்த்தனை, விரைவான தபால் பட்டுவாடா உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சாதனை படைத்த அலுவலர்களுக்கு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். மாநில அளவில் விருது பெற்ற கோவில்பட்டி கோட்ட அலுவலர்களும் இதில் பாராட்டப்பட்டனர்.

விழாவில் கோவில்பட்டி, சங்கரன்கோவில், தென்காசி உபகோட்ட கண்காணிப்பாளர்கள் மற்றும் அஞ்சல் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



# சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜை நேரில் சந்தித்து வாழ்த்து முழங்கிய அரசு அலுவலர் ஒன்றியம்

திருச்செங்கோடு, மே.18-

தமிழகப் புதிய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் அவர்களை, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் மகேந்திரகுமார் நேரில் சந்தித்துத் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அமைச்சரின் இல்லத்தில் சந்திப்பு: நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு குமாரமங்கலத்தில் உள்ள அமைச்சரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில், நில அளவைத்துறை, சத்துணவு பணியாளர் ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு அரசு ஊழியர் சங்கங்களின் முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டு அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில் நில அளவைத்துறை சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் பூங்குன்றன், மாவட்டத் தலைவர்கள் வெங்கடுசாமி (ஈரோடு), அமாவாசை (திருவண்ணாமலை), இளவரசன் (நாமக்கல்), திருச்சி பொருளாளர் ஆனந்த், நாமக்கல் செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் பங்கேற்றனர். மேலும், பிற்படுத்தப்பட்டோர் சங்க சட்ட ஆலோசகர் ராஜு, சத்துணவு ஒன்றிய முன்னாள் தலைவர் மாதையன், மாநில பொறுப்பாளர் கண்ணம்மா, நில அளவைத் துறை விஷ்ணு மற்றும் பள்ளிபாளையம் ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# கொடுமுடி பேரூர், ஊராட்சி செயலாளர்கள் ஈரோடு கிழக்கு எம்.எல்.ஏவுடன் திடீர் சந்திப்பு

ஈரோடு, மே.18-

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்றுள்ள ம.விஜய் பாலாஜி எம்.எல்.ஏ அவர்களை, கொடுமுடி ஒன்றியத்திற்குட்பட்ட பேரூர் மற்றும் ஊராட்சி திமுக செயலாளர்கள் நேரில் சந்தித்துத் தங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, தொகுதி மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றவும், கழக வளர்ச்சிப் பணிகளைத் தொய்வின்றி முன்னெடுக்கவும் எம்.எல்.ஏவிடம் நிர்வாகிகள் வாழ்த்துப் பெற்றுப் பேசினர். திரளான கட்சி நிர்வாகிகளும் உடன் இருந்தனர்.

# சாத்தூர் தொகுதியில் த.வெ.க.,வில் வெடித்தது கோஷ்டி மோதல்

## மாறி, மாறி போஸ்டர் யுத்தம்

சாத்தூர், மே.18-

சாத்தூர் தொகுதியில் தவெக கோஷ்டி மோதல் உச்சகட்டத்தில் உள்ளது. விருதுநகர் மத்திய தவெக மாவட்ட செயலாளர் சின்னப்பர். சாத்தூரை சேர்ந்த இவர் ஆட்டோ டிரைவராக உள்ளார். மாவட்ட இணை செயலாளர் அஜித். இவர்களிடையே ஆரம்பம் முதலே கோஷ்டி மோதல் இருந்து வருகிறது. குறிப்பாக ஆலோசனை கூட்டம், தெருமுனை பிரசாரம் உள்ளிட்டவை நடைபெறும் போது, அஜித் தரப்பிற்கு மாவட்ட செயலாளர் சின்னப்பர் முறையாக அழைப்பு விடுப்பதில்லை என கூறப்படுகிறது. இதனால் அஜித் ஆதரவாளர்கள், மாவட்ட செயலாளரிடம் மேடையிலேயே வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவங்கள் அடிக்கடி நடந்து வந்தன.

சாத்தூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட மாவட்ட செயலாளர் சின்னப்பர் காய் நகர்த்தி வந்தார். தவெக தலைமை அவருக்கு சீட் வழங்காமல் இணை செயலாளரான அஜித்திற்கு வழங்கியது. இதனால் ஆத்திரமடைந்த சின்னப்பர், தேர்தலில் அஜித்திற்கு ஆதரவாக வேலை செய்யாமல் இருந்தாக கூறப்படுகிறது. சாத்தூர் தொகுதியில் திமுக வேட்பாளர் கடற்கரைராஜ் வெற்றி பெற்றார். தவெக வேட்பாளர் அஜித் தோல்வியடைந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டார். இதனால் அதிருப்தியடைந்த அஜித், தலைமையிடம் சின்னப்பரின் செயல்பாடு குறித்து குமுறியுள்ளார்.

இதையடுத்து தவெக தலைமை சின்னப்பரை, மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது. ஆனால் இதற்கு அசைந்து கொடுக்காத சின்னப்பர், சாத்தூர் தொகுதியில் தனக்கே அதிக செல்வாக்கு இருப்பதுபோல் காட்டுவதற்காக, திரும்பும் பக்கம் எல்லாம், விஜய்யை வாழ்த்தி போஸ்டர்கள், பேனர்கள் வைத்துள்ளார். இதில் இணை செயலாளர் அஜித்தின் புகைப்படம் இல்லை. இதற்கு போட்டியாக அஜித்தின் ஆதரவாளர்களும் சின்னப்பரின் புகைப்படம் இல்லாமல் சாத்தூர் தொகுதியில் பேனர் வைத்து வருகின்றனர். இதனால் சாத்தூர் தொகுதியில் யார் பக்கம் இருப்பது என்று தெரியாமல் நிர்வாகிகள், தொண்டர்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர்.



## முதலமைச்சராக விஜய் பதவியேற்பு!

# கோவிலூர் கிராமத்தில் தவெக சார்பில் பிரம்மாண்ட அன்னதானம்

அலங்காநல்லூர் மே.18-

ஜோசப் விஜய் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்றதை முன்னிட்டு, மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கோவிலூர் கிராமத்தில் பொதுமக்களுக்குப் பிரம்மாண்ட அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

எம்.ஜி.ஆர் சிலைக்கு மரியாதை: மதுரை வடக்கு தொகுதி எம்.எல்.ஏ விஜய் அன்பன் கல்லானை, புறநகர் மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இந்த விழா நடைபெற்றது. அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர் முத்து, கிழக்கு ஒன்றியச் செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர் ரஞ்சித் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சோழவந்தான் தொகுதி எம்.எல்.ஏ மூ.வீ.கருப்பையா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, அங்குள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

உற்சாக வரவேற்பு: முன்னதாக கோவிலூர் கிராமத்திற்கு வருகை தந்த எம்.எல்.ஏ கருப்பையாவுக்குக் கட்சி நிர்வாகிகள் கைத்தறி ஆடை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வில் பாலமேடு பேரூர்ச் செயலாளர் புகழ், வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், கார்த்திக், மேற்கு ஒன்றியச் செயலாளர் சரவணன், வலையபட்டி கிளை நிர்வாகி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்த அன்னதானத்திற்கான ஏற்பாடுகளைச் செயற்குழு உறுப்பினர் லாரன்ஸ் சிறப்பான முறையில் செய்திருந்தார்.

# புதுச்சேரியில் தற்காலிக சபாநாயகர் பதவியேற்பு: தட்டாஞ்சாவடி தொகுதியை ராஜினாமா செய்கிறார் ரங்கசாமி



புதுச்சேரி, மே.18-

புதுச்சேரி தற்காலிக சபாநாயகராக அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் அன்பழகனுக்கு துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதன் நாளை நண்பகல் 12 மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். அன்றே தட்டாஞ்சாவடி தொகுதியை முதல்வர் ரங்கசாமி ராஜினாமா செய்கிறார் என தெரிகிறது.

புதுச்சேரி சட்டப் பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. என்.ஆர். காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக, லஜக தலா 1 இடங்கள் என மொத்தம் 18 இடங்களை கைப்பற்றியது. திமுக 5, காங்கிரஸ் 1, நேயம் மக்கள் கழகம் 1, தவெக 2, சுயேச்சைகள் 3 இடங்களையும் வென்றனர். தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் முதல்வராக ரங்கசாமி கடந்த 13ம் தேதி பதவியேற்றார். அவருடன் அமைச்சர்களாக நமச்சிவாயம், மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோரும் பதவி யேற்றனர்.

இந்த நிலையில், புதுச்சேரி தற்காலிக சபாநாயகராக உப்பளம் தொகுதியில் 5வது முறையாக வெற்றி பெற்ற அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் எம்எல்ஏ நியமனம் செய்யப்பட்டார். இதற்கான உத்தரவை துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதன் பிறப்பித்தார். தொடர்ந்து நாளை நண்பகல் 12 மணிக்கு ஆளுநர் மாளிகையில் அன்பழகனுக்கு சட்டப்பேரவை உறுப்பினராக துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். இதைத் தொடர்ந்து சட்டப்பேரவைக்கு வந்து தற்காலிக சபாநாயகராக அன்பழகன் பதவி ஏற்றுக்கொள்கிறார்.

முதல்வர் ரங்கசாமி தட்டாஞ்சாவடி மற்றும் மங்கலம் என இரு தொகுதிகளில் வெற்றி பெற்றார். இதற்கான சான்றிதழ் நான்காம் தேதி பெறப்பட்டது. 14 நாட்களுக்குள் அவர் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டும் என்ற விதியின் கீழ் தட்டாஞ்சாவடி தொகுதியை ரங்கசாமி நாளை ராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து வரும் 20ம் தேதி சட்டப்பேரவை கூடுவதற்கான அறிவிப்பை வெளியிடுகிறார்.

இதன் பின்னர் அந்த தினத்தில் சட்டப்பேரவை கூடியவுடன் அன்பழகன் மற்றும் தட்டாஞ்சாவடி தொகுதி நீங்கலாக 28 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்று கொள்கின்றனர். புதுச்சேரியில் இன்னும் 3 அமைச்சர்கள் அறிவிக்கப்படாமல் இழுபறி நீடிக்கிறது. அதேபோல, புதி தாக பொறுப்பேற்ற முதல்வர் மற்றும் இரு அமைச்சர்களுக்கும் துறைகள் இன்னும் ஒதுக்கப்படவில்லை.

## சேலம் ஓமலூர் பேருந்து நிலையம் அருகே

# டாஸ்மாக் கடை மூடப்பட்ட இடத்தில் தனியார் பார் திறப்பு

சேலம், மே.18-




சேலம் ஓமலூர் பேருந்து நிலையம் அருகே டாஸ்மாக் கடை மூடப்பட்ட இடத்தில் தனியார் பார் திறக்கப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். 2 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்ட நிலையில் பேருந்து நிலையம், கோயில்கள் உள்ள இடத்தில் தனியார் பார் திறக்கப்பட்டுள்ளதால் மக்கள் கவலையடைந்துள்ளனர்

# காவல்துறையில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றிய தமிழகம் முழுவதும் 162 தொழில்நுட்ப எஸ்ஐக்கள் பணியிடமாற்றம்

## தொழில்நுட்ப பிரிவு டிஐஜி ஜெயலட்சுமி உத்தரவு

சென்னை, மே.18-

தமிழக காவல் துறையில் பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்ப சார்ந்த பணிகளில் எஸ்ஐக்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் 3 ஆண்டுகளுக்கு மேல் ஓரே இடத்தில் பணியாற்றியதால் அவர்களை நிர்வாக வசதிக்காகவும் மற்றும் எஸ்ஐக்களின் மற்ற பிரிவுகளில் செல்ல விருப்ப மனுக்களின் படி காவல்துறை தொழில்நுட்ப பிரிவு டிஐஜி ஜெயலட்சுமி 162 எஸ்ஐக்களை காவல்துறையில் உள்ள பல்வேறு பிரிவுகலுக்கு பணியிடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, சிபிசிஐடி தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றிய எஸ்ஐ பால ஆத்ம நேசர் சென்னை பயங்கரவாத எதிர்ப்பு படைக்கும், தமிழ்நாடு ஆன்லைன் கேமிங் ஆணையத்தில் பணியாற்றிய இர்பான் அயாஸ் சென்னை, பயங்கரவாத எதிர்ப்பு படைக்கும், பொருளாதார குற்றப்பிரிவில் பணியாற்றிய ராபர்ட் புரூஸ் சென்னை, பயங்கரவாத எதிர்ப்பு படைக்கும், தமிழ்நாடு 3வது பட்டாலியன் வீராபுரத்தில் பணியாற்றிய கலைச்செல்வி ஆவடி மாநகர காவல்துறைக்கும், சென்னை மாநகர கிழக்கு மண்டலத்தில் பணியாற்றிய பாஸ்கர் சென்னை மாநகர வடக்கு மண்டலத்திற்கும், காவல் துறை தலைமையகத்தில் பராமரிப்பு பிரிவில் பணியாற்றி வந்த நாகராஜன் தொழில்நுட்ப பிரிவுக்கும், சென்னை பயங்கரவாத தடுப்பு பிரிவில் பணியாற்றிய அகிலன் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவுக்கும், மாநில குற்ற ஆவண காப்பகத்தில் பணியாற்றிய விமலா சென்னை மாநகர மேற்கு மண்டலத்திற்கும், சென்னை வேப்பேரியில் தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றி வந்த கனின் நுண்ணறிவுப்பிரிவுக்கும், சென்னை கடலோர பாதுகாப்பு குழுமத்தில் பணியாற்றி வந்த தினேஷ் சந்தர் எஸ்பி சிஐடிக்கும், சென்னை கடலோர பாதுகாப்பு குழுமத்தில் பணியாற்றி வந்த ராஜராஜன் எஸ்பிசிஐடிக்கும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதுபோல் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றி வந்த எஸ்ஐக்கள் அந்த பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு மற்ற பிரிவுகளுக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# ராஜ்மோகனுக்கு திரைப்பட தொழில்நுட்பம், ஒளிப்பதிவுத் துறை ஒதுக்கீடு செய்ததது வருத்தமளிக்கிறது



சென்னை, மே.18-

ராஜ்மோகனுக்கு திரைப்பட தொழில்நுட்பம், ஒளிப்பதிவுத் துறை ஒதுக்கீடு செய்ததது வருத்தமளிக்கிறது என நடிகர் விஷால் கூறியுள்ளார். திரைத்துறையில் என்ன நடக்கிறது என்ற குறைந்தபட்ச அனுபவம் இல்லாத ஒருவர் எப்படி சீர்திருத்தம் செய்ய முடியும்..? 30 ஆண்டுகளாக திரைத்துறையில் இருக்கும் முதல்வரை விட ராஜ்மோகன் எப்படி பொருத்தமானவராக இருப்பார்? என நடிகர் விஷால் கேள்வியெழுப்பியுள்ளார்




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000